# தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
# 46 ஆவது குருமகா சந்நிதானம்
# திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி

## வாழ்க்கைக் குறிப்பு

**பெயர்:** திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

**முகவரி:** திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி – 630206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு
Kundrakudiadheenam@gmail.com

**தோற்றம்:** 16-04-1964

**கல்வி:** பி.எஸ்.சி. (வேதியியல்)

**துறவு மேற்கொண்ட நாள்:** 22-06-1993

**இளையப்பட்டம் ஏற்ற நாள்:** 03-07-1993

**ஞானபீடமேறிய நாள்:** 24-04-1995

## பொறுப்புகள்

**பரம்பரை அறங்காவலர்**

1. அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில், குன்றக்குடி.
2. அருள்தரு திருக்கொடுங்குன்ற நாதர், அருள்தரு மங்கைபாகர் திருக்கோயில், பிரான்மலை.
3. அருள்தரு உருத்திரகோடீசுவரர் திருக்கோயில், சதுர்வேத மங்கலம்.
4. திருத்தளிநாதர் திருக்கோயில், திருப்புத்தூர்.

5. அருள்தரு ககோளபுரீசுவரர் திருக்கோயில், திருக்கோளக்குடி.
6. அருள்தரு தேனாச்சியம்மன் திருக்கோயில், தேனாச்சியம்மன் கோயில்.

மாநிலத் தலைவர் — அருள்நெறித் திருக்கூட்டம்

மாநிலப் பொதுச்செயலர் — திருவருள் பேரவை

நிர்வாக அறங்காவலர் — தவத்திரு குன்றக்குடி அடிகளார் அறக்கட்டளை

தலைவர்
1. உலகத் திருக்குறள் பேரவை
2. மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி.
3. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் கல்வி அறக்கட்டளை.

முதன்மைப் புரவலர் — குன்றக்குடி சுதேசி அறிவியல் இயக்கம்.

நெறியாளர் — குன்றக்குடி கிராமத் திட்டக்குழு

துணைத் தலைவர் — கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பொது நிகழ்ச்சிகளின் அமைப்புக் குழு.

## கல்வி நிறுவனங்களின் தாளாளர்/ செயலர்

1. ஸ்ரீ தெய்வசிகாமணி அருள்நெறித் தொடக்கப் பள்ளி, குன்றக்குடி.
2. டாக்டர் அம்பேத்கார் அருள்நெறித் தொடக்கப் பள்ளி, நாங்குநேரி.
3. அருள்நெறி இந்து தொடக்கப் பள்ளி, திருமலையப்பப்புரம்.
4. சரசுவதி தொடக்கப் பள்ளி, ஆயக்காரன்புலம்.
5. இந்து அருள்நெறித் தொடக்கப் பள்ளி, விஜயஅச்சம்பாடு.
6. திருவள்ளுவர் அருள்நெறி நடுநிலைப் பள்ளி, தேவக்கோட்டை.
7. திருவள்ளுவர் அருள்நெறி நடுநிலைப் பள்ளி, கொறுக்கை.
8. அருள்நெறி இந்து உயர்நிலைப் பள்ளி, திருமலையப்பப்புரம்.
9. செந்திலாண்டவர் இந்து அருள்நெறி உயர்நிலைப் பள்ளி, விஜயஅச்சம்பாடு.
10. தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப் பள்ளி, குன்றக்குடி.

11. வள்ளல் பாரி மேல்நிலைப் பள்ளி, பிரான்மலை.
12. திருப்பதி அருள்நெறி மேல்நிலைப் பள்ளி, கள்ளிமந்தயம்.
13. கோமதி அருள்நெறி மகளிர் மேல்நிலைப் பள்ளி, களக்காடு.
14. திருவள்ளுவர் கல்லூரி, பொதிகையடி, பாபநாசம்.
15. திருவள்ளுவர் தொழிற் பயிற்சி மையம், வாழப்பட்டு.
16. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற் பயிற்சி மையம், குன்றக்குடி.
17. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற் பள்ளி, குன்றக்குடி.
18. திருவள்ளுவர் தொழிற் பள்ளி, வாழப்பட்டு.
19. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி, குன்றக்குடி.

சிறப்பாசிரியர் மக்கள் சிந்தனை மாத இதழ்

நிர்வாக ஆசிரியர் அறிக அறிவியல் மாத இதழ்

உறுப்பினர்

1. உயர்நிலை ஆலோசனைக்குழு உறுப்பினர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை.
2. தமிழக அரசு சமூக சீர்திருத்தக்குழு உறுப்பினர்.
3. தமிழக அரசு புராதன கட்டிடங்கள் பாதுகாப்புக் குழு உறுப்பினர்.
4. செயற்குழு உறுப்பினர், தமிழக அரசு ‘அனைவரும் அர்ச்சகராகலாம்’ சட்டக்குழு.
5. தமிழக ஆளுநர்வழி நியமன ஆட்சிக்குழு உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
6. பதிப்புக் குழு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான செம்மொழி உயர் ஆய்வு மைய இயக்குநர் தேர்வுக்குழு உறுப்பினர்.
8. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் & ஆராய்ச்சிப் பாடத் திட்டக்குழு உறுப்பினர்.
9. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ச் செம்மல்கள் பேரவை உறுப்பினர்.

10. தமிழக அரசின் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்.
11. தமிழக அரசின் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டுக்குழு உறுப்பினர்.

## சமயப் பணிகள்

**அ. ஆதின அருளாளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களைப் புனரமைத்து மீண்டும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக்கள் நடத்திய விவரங்கள்**

1. அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில், குன்றக்குடி. (19-03-2014)
2. அருள்தரு திருக்கொடுங்குன்ற நாதர், அருள்தரு மங்கைப்பாகர் திருக்கோயில் பிரான்மலை (12-09-2019)
3. அருள்தரு உருத்திரகோடீசுவரர் திருக்கோயில், சதுர்வேத மங்கலம். (14-09-2005)
4. திருத்தளிநாதர் திருக்கோயில், திருப்புத்தூர். (20-06-2011)
5. அருள்தரு ககோளபுரீசுவரர் திருக்கோயில், திருக்கோளக்குடி. (09-09-2015)
6. அருள்தரு தேனாச்சியம்மன் திருக்கோயில், தேனாச்சியம்மன் கோயில். (10-03-2003) (08-09-2022)
7. அருள்தரு தெண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், அரவன்கிரி. (05-04-1996)
8. அருள்நெறித் தந்தை அருளாலயம், குன்றக்குடி. (11-02-2000)

**ஆ. குன்றக்குடி, திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட தலங்களில் சிவனடியார்களுக்குத் தமிழ் வழிபாட்டு முறைப் பயிற்சி வகுப்புகள் நடத்தியமை.**

**இ. சமய நெறிநின்று சமுதாய, இலக்கியப் பணிகள் ஆற்றிவரும் தகுதியாளர்களுக்கு ஆதினக் குருபூசை விழா, விசாக விழா நாட்களில், மரபுவழி விருதுகள், பொற்கிழிகள் வழங்கிப் பாராட்டி வருகின்றமை.**

**ஈ. அருள்நெறித் திருக்கூட்டக் கிளைகள், தெய்வீகப் பேரவைக் கிளைகள் நடத்தும் விழாக்களில் பங்கேற்று, தக்கோரைப் பாராட்டியும், தலைமை உரை நிகழ்த்தியும் நெறிப்படுத்தி வருகின்றமை.**

# சமுதாயப் பணிகள்

## அ. அமைதிப் பணிகள்

- கோவை மாநகர மதக் கலவரத்தின் போது திருவருட் பேரவையினர் துணையுடன் செய்த சமய நல்லிணக்கப் பணிகள். (டிசம்பர் 1997)
- தென்மாவட்டங்களில் ஏற்பட்ட சாதிக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, அமைதிப் பணி புரிந்ததோடு, பாதிக்கப்பட்டோருக்கு உரிய உதவிகள் புரிந்து ரூ.1,00,000 அளவில் நிதி நல்கியமை. (1996)
- விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பகுதிகளில் கலவரங்களால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, தமிழக அரசிற்கு அறிக்கை தந்து நிவாரணப் பணிகள் மேற்கொண்டமை. (1996)
- சாதிப் பூசலேற்பட்ட மதுரை மாவட்ட உத்தமபுரத்தில் அமைதிப் பணி. (15.05.2008)

## ஆ. துயர் துடைப்புப் பணிகள்

- கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு, பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, துயருற்றோருக்கு ஆறுதல் கூறி, உதவிகள் புரிந்தமை. (2000)
- குடந்தை, பள்ளித் தீ விபத்தின்போது துயர் நிவாரணப் பணி. (ஜுலை, 2004)
- சுனாமியால் பேரழிவு ஏற்பட்ட நாகைப் பகுதிகளில் துயர் துடைப்புப் பணி. (டிசம்பர், 2004)
- வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூரை அடுத்துள்ள ஆத்தங்கரைப்பட்டியில் துயர் துடைப்புப் பணி. (2005)
- கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, உலகத் திருக்குறள் பேரவையினர் துணையுடன் சென்று நிவாரணப் பணிகள். (நவம்பர், 2018)
- தஞ்சை அருகே களிமேடு கிராமத்தில் அப்பர் பெருமான் சதய விழா நாளில் நடந்த தேர் விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நேரில் சென்று ஆறுதல் கூறியமை. (02.05.2023)

- **கரோனா நோய்த்தொற்றைத் தடுக்கப் போராடும் தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், முதல்வர் நிவாரணப் பணிக்காக ரூ.10 லட்சம் வழங்கியமை. (15.05.2021)**

## இ. வேளாண் பணிகள்

- அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் அவர்கள் நிறுவிய வேளாண் இயக்கங்களை வலுப்படுத்தி, வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சிகள் நல்கி வருகின்றமை.
- ஈ. அயலகப் பயணங்களும் பணிகளும்
- சிங்கப்பூர் திருக்குறள் பேரவை மாநாடு. (2005)
- மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் மாநாடு. (2005)
- இலண்டன் ஒன்பதாவது சைவ மாநாடு, இலண்டன் இந்துத் திருக்கோயில் நிகழ்ச்சிகள். (2006)
- அமெரிக்கா அட்லாண்டா (மே, 2019) 21 நாட்கள் பயணம்.
- மோன்க்யூர் கரோலினா முருகன் கோவிலில் ஆன்மீகத் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை வளர்க்கும் 130 ஏக்கர் பரப்பளவிலான பண்பாட்டு மையத்திற்கு அடிக்கல் நாட்டி ஆன்மீகப் பேருரை நிகழ்த்தியமை. (27.05.2019)

### உ. அறக்கொடைகள்

- கார்கில் போர் மற்றும் இயற்கைப் பேரிடர் தொடர்பான நிவாரணத் திட்டங்களுக்கு அவ்வக் காலத்தில் பல இலட்ச ரூபாய்களை நிவாரண நிதியாக வழங்கியமை.
- கொரோனா பெருந்தொற்றை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் நிவாரணப் பணிகளுக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்கியமை. (15.05.2021)
- சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ரூபாய் ஐந்து லட்சம் வழங்கியமை. (25.12.2023)

- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி, புதுக்குடி கிராமத்து மக்களுக்கு, ரூ. 5 லட்சம் மதிப்பிலான அரிசி மற்றும் மளிகைப் பொருள்களை வழங்கியமை. (28.12.2023)
- தென்காசி திருவள்ளுவர் கழக அறக்கட்டளைக்கு ஐம்பதாயிரம் ரூபாய் அறக்கொடை வழங்கியமை. (09.07.2023)
- வசதியற்ற மாணவர்களுக்கான கல்விக் கொடைகளையும், நலிந்தோருக்கான மருத்துவ உதவிகளையும் தொடர்ந்து செய்து வருகின்றமை.

## இலக்கியப் பணிகள்

### அ. எழுத்துப் பணிகள்

- ஆனந்த விகடனில் ‘அன்பே தவம்’ தொடர் 45 வாரங்கள்.
- ‘மக்கள் சிந்தனை’, ‘அறிக அறிவியல்’ ஆகிய இதழ்களில் தலையங்கக் கட்டுரைகள்.
- ஆனந்த விகடன், தி இந்து தமிழ், தினமணி தீபாவளி மலர்களில் சிறப்புக் கட்டுரைகள்.
- ஓம்சக்தி, சக்தி விகடன், தொடரும் உள்ளிட்ட இதழ்களில் ஆன்மீக, இலக்கியக் கட்டுரைகள்.
- திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்கள், மாநாட்டுச் சிறப்பு மலர்கள் உள்ளிட்ட பல்வேறு மலர்களில் வாழ்த்துரைகள், கட்டுரைகள்.
- தமிழ், ஆங்கில இதழ்களில், மின்னணு ஊடகங்களில் நேர்காணல்கள்.

### ஆ. எழுதிய நூல்கள்

- சமய வாழ்வு, மு.ப.1999, (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி) ம.ப. 2009.
- காற்றில் வந்த கருத்து மழை (திருமாறன் நிலையம், சென்னை) 2005.
- தமிழ்ப் பண்பாடு (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி) 2009.
- உயிர் நாளில் தொடுத்த மாலை (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி) 2013.
- அன்பே வாழ்வு, (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி) 2016.
- அன்பே தவம் (ஆனந்த விகடன் பிரசுரம், சென்னை) 2019.
- மேடைத் தென்றல் (அச்சில்)

- திருவெம்பாவைத் திறன் (அச்சில்)

## பதிப்பித்துள்ள நூல்கள்

### (மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்ட நூல்கள்)

- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 1 திருக்குறள் (1999)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 2 திருக்குறள் (2000)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 3 திருக்குறள் (2000)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 4 திருக்குறள் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 5 இலக்கியம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 6 இலக்கியம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 7 சமய இலக்கியம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 8 சமய இலக்கியம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 9 சமய இலக்கியம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 10 சமயம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 11 சமயம் (2001)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 12 சமயம் (2002)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 13 பொது (2002)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 14 பொது (2002)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 15 பொது (2002)
- ✓ குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி – 16 பொது (2002)
- ✓ திருக்குறள், தவத்திரு குன்றக்குடி அடிகளார் உரை (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி) (2005) (உலகத் திருக்குறள் பேரவை, குன்றக்குடி) (திருத்திய பதிப்பு 2018)
- ✓ அருள்நெறி முழக்கம் (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி) (2006)
- ✓ திருக்கோளக்குடி தல வரலாறு (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி)
- ✓ நமது நிலையில் சமயமும் சமுதாயமும் (அருள்நெறிப் பதிப்பகம், குன்றக்குடி)

## இயக்கப் பணிகள்

- மாவட்டத் தோறும் இயங்கி வரும் உலகத் திருக்குறள் பேரவைக் கிளைகளின் ஆண்டு விழாக் கூட்டங்கள், மாநாடுகள், சிறப்பு விழாக்களை முன்னின்று நிகழ்த்தியமை.
- தமிழுக்குச் செம்மொழிச் சிறப்பினைப் பெற்றுத் தந்த மேனாள் தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு, மதுரையில் பாராட்டு விழா நடத்திக் தங்க நெல்லிக்கனி வழங்கியமை.
- உலகத் திருக்குறள் பேரவையின் சார்பில், தகுதிசால் தமிழறிஞர்களுக்கும் திருக்குறள் தொண்டாற்றியவர்களுக்கும் விருதுகள் பரிசுகள் வழங்கிப் பாராட்டியமை. குறிப்பாக, மேனாள் தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, ‘திருக்குறள் பேரொளி’ என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தமை. (10.02.2010)
- திருச்சிராப்பள்ளி, மதுரை, இரத்தினகிரி உள்ளிட்ட நகர்களில் திருக்குறள் மாநாடுகள் நடத்தியமை.
- குன்றக்குடி அறிவியல் சுதேசி இயக்கம் சார்பில், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அறிவியல் பேரவை மாநாடுகள், கருத்தரங்குகள் நிகழ்த்தியமை. குறிப்பாக, காரைக்குடி சுதேசி அறிவியல் இயக்கமும், சேலம் பெரியார் பல்கலைக்கழகமும் இணைந்து அறிவியல் பேரவையின் 12 ஆவது கருத்தரங்கத்தினை, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில், 3 நாட்கள் நடத்தியமை. (ஆகஸ்ட், 23, 24, 25 - 2012)
- பறம்புமலையில் பாரி விழா நிகழ்த்தி, மேனாள் அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர் தமிழ்க்குடிமகனுக்குப் பாராட்டும், எழுத்தாளர் பொன்னீலனுக்கு, ‘எழுத்து வேந்தர்’ விருது வழங்கிச் சிறப்பித்தமை. அருள்நெறித் தந்தை அவர்கள் நடத்திய மரபுவழி, ஆண்டுதோறும் விழா நடத்தி வருதல்.

## சொற்பொழிவுகள்

- பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவன விழாக்களில் சிறப்புரைகள்.


- கல்லூரி, பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவுரைகள், அறக்கட்டளைப் பொழிவுகள்.
- உலகத் திருக்குறள் பேரவை, சாகித்ய அகாதெமி, கம்பன் கழகங்கள், சேக்கிழார் மன்றம், தமிழ்ச் சங்கங்கள், கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் உள்ளிட்ட இலக்கிய அமைப்புகளில் தலைமையுரைகள், சிறப்புரைகள்.
- சென்னை, ஈரோடு, காரைக்குடி, சிவகங்கை, தேவகோட்டை உள்ளிட்ட நகரங்களில் நடைபெற்ற புத்தகத் திருவிழாக்களில் சிறப்புரைகள்.
- வானொலி, தொலைக்காட்சி முதலிய மின்னணு ஊடகங்களில் அருளுரைகள், சிந்தனையுரைகள்.
- நடுவண் அரசு, மாநில அரசு நிகழ்வுகள், திருக்கோயில் நிகழ்வுகள், கலை, இலக்கிய, ஆன்மிக அரங்குகளில் அருளுரைகள், வாழ்த்துரைகள், சிறப்புரைகள்.
- மாநாடுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் உள்ளிட்ட நிகழ்வுகளில் தலைமையுரைகள், சிறப்புரைகள்.

## சாகித்திய அகாதெமி நிகழ்வு உரைகள்

- சாகித்திய அகாதெமியுடன் தொடரும் இதழ் இணைந்து குன்றக்குடி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரியில் நடத்திய சிறுவர் இதழ்கள் பற்றிய முழுநாள் உரையரங்கினைத் தலைமை தாங்கி நடத்தியமை. (22.10.2016)
- சாகித்திய அகாதெமி, காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியுடன் இணைந்து நடத்திய பரமஹமஸதாசன் நூற்றாண்டு விழா உரையரங்கச் சிறப்புரை. (14.12.2016)
- சாகித்திய அகாதெமியுடன் இணைந்து, பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரி நிகழ்த்திய ரா.பி.சேதுபிள்ளை இலக்கிய அரங்கில் உரை. (18.10.2017)
- சாகித்திய அகாதெமி, தொடரும் இதழுடன் இணைந்து சிங்கம்புணரியில் நடத்திய ப.சிங்காரம் நூற்றாண்டு உரையரங்கில் பங்கேற்றுத் தலைமை உரை நிகழ்த்தியமை. (19.12.2021)

## பெற்ற விருதுகள்

1. தமிழக அரசின் கலைமாமணி விருது. (2006)
2. இந்திய அரசின் விவசாயத் துறை அமைச்சகம் வழங்கிய கிரிஷக் சிரோன்மணி ஸம்மான் விருது.
3. மதுரை தமிழிசைச் சங்கத்தின் முத்தமிழ்ப் பேரறிஞர் விருது.
4. சென்னை முத்தமிழ் மன்றம் சார்பாக தமிழக முதல்வர் முத்தமிழிறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய இயல் செல்வம் விருது.
5. தமிழக அரசின் 2008 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது.
6. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வழங்கிய 2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்ப் பேரவைச் செம்மல் விருது.
7. திண்டுக்கல் காந்தி கிராம, கிராமியப் பல்கலைக்கழகம் வழங்கிய மனிதநேயப் பண்பாளர் விருது. (2009)
8. திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கிய கலைஞர் விருது. (2009)
9. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் – செந்தமிழ்க் கல்லூரி வைரவிழாவில் வழங்கிய ஆன்மீகச் செம்மல் விருது. (2018)
10. கோவை கற்பகம் பல்கலைக்கழகம் வழங்கிய மதிப்புறு அறிவியல் முனைவர் பட்டம் (The Degree of Doctor of Science) எனும் மதிப்புறு முனைவர் பட்டம். (Honoris Causa) (19.10.2013)
11. அமெரிக்கா, தமிழ்நாடு அறக்கட்டளை (கல்வி மற்றும் சமுதாய சேவையைப் போற்றி வழங்கிய) மாட்சியமை விருது. (2019)
12. பெங்களூரு தென்னிந்திய மண்டலக் குழு வழங்கிய ஸ்ரீ மகாத்மா ஜோதிராவ் புலே விருது.
13. திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம் வழங்கிய மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பொற்கிழி விருது. (27.04.2024)



## “வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்!”

இந்தியாவின் பாரம்பர்யமான சைவ மடங்களில் ஒன்று திருவாவடுதுறை ஆதீனம். 1947-ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தபோது அதன் மடாதிபதியாக இருந்தவர் அம்பலவாண தேசிகர். ஆங்கிலேயர்களிடமிருந்து ஆட்சி அதிகாரம் இந்தியர்களிடம் மாறுவதைக் குறிக்கும் வகையில் சுதந்திர இந்தியாவின் புதிய பிரதமருக்கு செங்கோல் ஒன்றை வழங்கலாம் என்று மூதறிஞர் ராஜாஜி போன்றோர் தீர்மானித்தனர்.

திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 14-ஆம் தேதி நள்ளிரவில் நேருவின் இல்லத்துக்கு மங்கள இசையுடன் ஊர்வலமாக செங்கோலை எடுத்துச் சென்றனர். மடத்தின் கட்டளை சாமி தேவாரம் பாடி, செங்கோல் மீது புனிதநீர் தெளித்து, இறை நாமம் உச்சரித்து, நேருவுக்குப் பொன்னாடை போர்த்தி செங்கோலை அவர் கையில் கொடுத்தனர். அந்தச் செங்கோல் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நடைபெற்று 75 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28.5.23) புதிய பாராளுமன்றக் கட்டடம் பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த செங்கோலை நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவும் நிகழ்வு பாராளுமன்றத்திறப்பு விழாவின்போது திட்டமிடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளத் தமிழகத்தைச் சேர்ந்த சைவ ஆதீனங்கள் அனைத்துக்கும் முறையாக அழைப்பு வழங்கப்பட்டிருந்தது. அதை ஏற்றுக்கொண்ட இருபது ஆதீனங்களும் டெல்லியில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இது குறித்து இந்த நிகழ்வில் கலந்துகொண்ட குன்றக்குடி ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடம் கேட்டோம்.

"கடந்த ஞாயிறு அன்று, இந்திய வரலாற்றில் முக்கியமான நிகழ்வான புதிய பாராளுமன்றக் கட்டடம் திறந்துவைக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள நமக்கு முறைப்படி அழைப்பு விடப்பட்டிருந்தது. நாமும் தமிழகத்தைச் சேர்ந்த இருபது ஆதீனகர்த்தர்கள் சேர்ந்து டெல்லி சென்று அந்த நிகழ்வில் கலந்துகொண்டோம்.

சனிக்கிழமை (27.5.23) அன்று டெல்லி சென்று சேர்ந்தோம். அன்றைய நாள் மாலை யில் பிரதமர் இல்லத்தில் தேநீர் விருந்துப்போன்ற சந்திப்பு நிகழந்தது. அதில் அனைத்து ஆதீன கர்த்தர்களும் கலந்துகொண்டோம். அப்போது பிரதமர் ஒவ்வொரு ஆதீனமாக அழைத்து மரியாதை செய்தார். ஆதீனங்களின் சார்பில் ஒவ்வொருவரும் பிரதமருக்கு நினைவுப் பரிசு வழங்கினோம்.


சில ஆதீனங்கள் செங்கோல் வழங்கினர். சிலர் நினைவுப் பரிசு வழங்கினர். நாம் நம் ஆதீனத்தில் இருந்து வெளியிட்ட நூல்கள், வெள்ளிக் குத்துவிளக்கு மற்றும் ஏலக்காய் மாலை, சால்வை ஆகியவற்றை வழங்கினோம்.

'1947 - ஆம் ஆண்டு நடந்த செங்கோல் வழங்கும் நிகழ்வை மீண்டும் நிகழ்த்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுக்காக நன்றி தெரிவித்தோம். மேலும் இந்த தருணத்தில் நம் நாடு ஒளிபொருந்தியதாகத் திகழட்டும்' என்று வாழ்த்தி குத்துவிளக்கை நினைவுப்பரிசாக வழங்கினோம். அதன்பின் பிரதமர் உரையாற்றினார். அந்த நிகழ்வு சிறப்பாக நிறைவுபெற்றது.

மறுநாள் காலையில் செங்கோலைப் பாராளுமன்றத்தில் நிறுவும் நிகழ்வு நடைபெற்றது. அதில் ஆதீனங்கள் அனைவரும் கலந்துகொண்டோம். பிரதமர் அனைத்து ஆதீனகர்த்தர்களிடமும் ஆசி பெற்றார். பிறகு திருமுறைகள் முழங்க செங்கோலைச் சுமந்து சென்று நிறுவினார்.

உண்மையிலேயே இந்த நிகழ்வு காண்பதற்கு மங்களகரமாக இருந்தது. தமிழகப் பாரம்பர்ய மங்கல இசை முழங்க, திருமுறைகள் ஒலிக்க பிரதமர் செங்கோலை ஏந்திச் சென்று நிறுவினார். அதன்பின் நாம் பரிசளித்த குத்துவிளக்கைப் பிரதமர் ஏற்றிவைத்தார். காண்பதற்கு இந்த நிகழ்வு நிறைவாக இருந்தது" என்று நெகிழ்வுடன் கூறினார்.

நன்றி: ஆனந்தவிகடன் 30.05.2023






# KARPAGAM UNIVERSITY

**Karpagam Academy of Higher Education**

(Established Under Section 3 of UGC Act, 1956)

Eachanari Post, Coimbatore - 641 021, INDIA


*19th October 2013*

**Citation for**

## MAHASANNITHANAM THAVATHIRU PONNAMBALA ADIGALAR

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.
(திருக்குறள் - 3 : 3)

*Their greatness alone shines bright*
*Who, knowing both, choose renunciation.*
*(Thirukkural - 3 : 3)*



Thavathiru Deivasigamani Ponnambala Adigalar, is a Tamil Scholar, a graduate in Chemistry, a renowned and widely acclaimed erudite scholar in religion, in saiva siddhantha philosophy and literature. He is also a saviour of inter-religious harmony.

Thavathiru Deivasigamani Ponnambala Adigalar, born on 9th July 1964, assumed position as Spiritual leader of the Aatheenam on July 3, 1993 under the title ILAIYA PATTAM and then ascended the throne of the Aatheenam on April 24, 1995. He is the 46th Guru Maha Sannithanam and the head of Kundrakudi Thiruvannamalai Aatheenam. The Kundrakudi Thiruvannamalai Aatheenam is one of the eighteenth Aatheenam in the lineage of Thirukailaya Saiva Aatheenams.

Adigalar is the Managing Trustee of the Thavathiru Kundrakudi Adigalar Educational Trust and the Heriditary Trustee of several temples located at Kundrakudi, Tirupattur, Piranmalai, S.V. Mangalam, Thirukolakudi and Thenachiammankoil. Adigalar is the State President of the Arulneri Thirukkoottam, Thirukkural Peravai and Thiruvarul Peravai an organisation of leaders of all religions for promotion of harmony. He is also the Founder President of Jan Shikshan Sansthan, Kundrakudi.

Concurrently with his position as Head of the Aatheenam, Adigalar is actively engaged in various social activities. Adigalar is also the Co-ordinator of the Village Planning Forum and Farmers Organisation, Kundrakudi which are involved in Rural Development Activities.

Remarkable among his contributions to society and humanity are the relief work undertaken by him during the 2004 Tsunami where he personally visited the victims of Nagapattinam and offered solace. He also proved himself to be a true philanthropist during the Kumbakonam Saraswathi Matriculation School fire incident where he offered consolation.

During the communal riots, in the southern districts of Tamil Nadu that occurred on 24 and 25, May 1997, Adigalar with the assistance of the District Collector of Virudhunagar and with officials of several literary associations met the victims and took initiatives to re-establish peace and harmony. He traversed villages in and around Rajapalayam and Srivilliputhur reaching out to the masses spreading the message of harmony and peace. Later he submitted a report to the Govt. of Tamil Nadu on the heavy loss incurred during the riots. His report was highly instrumental in reconstructing five proof huts which were set ablaze in the riots.

Further, during the Hindu-Muslim communal riots of December 1997, in Coimbatore district, Thavathiru Ponnambala Adigalar with Thiru. A. Devaraj from the Thiruvarul Peravai met Muslim religious leaders on 26 and 27, December 1997, held talks with them and took all efforts for reconciliation in the region.

This renowned philanthropist is also endowed with excellent oratorical and writing skills. He has been invited to the Singapore Thirukkural Peravai Conference (2005), the Malaysia Arulneri Thirukkoottam Conference (2005), the Ninth Saiva Conference in London (2006) and the Tamil Religious Literature Conference in Malaysia (2010) where he delivered powerful lectures.

Adigalar is the recipient of various prestigious awards such as the Krishak Shironmani Samman, the Kalaimamani Award, the Muthamizh Perarignar Award, the Iyal Selvam Award, the Thiruvalluvar Virudhu, the Tamil Chemmal Award and the Best Humanitarian Award.

A keen reader and scholar, Adigalar has authored books such as Samaya Vazhvu, Kattril Vandha Karutha Mazhai, Tamil Panpaadu, Medai Thendral, Thiruvembavai Thiran in Tamil. He is the editor of a monthly journal Makkal Chinthanai and a science journal Ariga Ariviyal in Tamil.

To honor Mahasannithanam Thavathiru Ponnambala Adigalar's pre-eminent qualities for his devoted service to humanity for removing obstacles that keep humans from achieving their potential, for promoting inter-religious understanding and harmony, creating spaces for grace and generosity so that our best selves can be realised, Karpagam University is pleased to confer on Mahasannithanam Thavathiru Ponnambala Adigalar, the Degree of Doctor of Science *(Honoris Causa)* in the 4th Convocation on 19th October 2013 and wishes that Mahasannithanam Thavathiru Ponnambala Adigalar continues to serve humanity for many more years to come.

Registrar | Vice Chancellor | Chancellor

தமிழ்நாடு அரசு

# அய்யன் திருவள்ளுவர் விருது - 2008

விருது பெறுபவர்: **தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்** அவர்கள்

## தகுதியுரை

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்'**

என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிறப்பால் உயர்வு தாழ்வற்ற சமுதாய நெறிமுறையைத் தமிழில் பதிவு செய்தவர் திருவள்ளுவர். திருக்குறள் எனும் ஒப்புயர்வற்ற நூலினைத் தந்து தமிழ்மொழிக்கும், தமிழ்மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர். சாதி, மதம், மொழி, நாடு, இனம் கடந்து அனைவராலும் பின்பற்றத் தக்க விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதால் திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுவதோடு உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுமுள்ளது. இத்தகு சிறப்பு வாய்ந்த திருக்குறளின் - திருவள்ளுவரின் நெறி பரப்பும் வகையில் பணியாற்றும் ஒருவருக்குத் தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் பெயரால் ஆண்டுதோறும் விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

திருக்குறள் நெறிநின்று சமுதாயப் பணியாற்றித் திருவள்ளுவப் பெருந்தகையின் புகழ் பரப்பும் சான்றோர்களுள் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் 46-ஆவது 'குருமகா சந்நிதானமாக' இருப்பவர்.

உலகத் திருக்குறள் பேரவை, திருவருள் பேரவை, அருள்நெறித்திருக்கூட்டம், குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழு, மக்கள் கல்வி நிலையம், இந்து சமய அறநிலையத்துறை முதலியவற்றின் வாயிலாக இவர் ஆற்றிவரும் பணிகள் போற்றத்தக்கன.

ஆதீனத்தின்கீழ் 16 கல்வி நிறுவனங்களின் வழியே ஏழை எளிய மக்களும் எழுத்தறிவு பெறும் வகையில் கல்விப் பணியாற்றி வருகிறார். மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் ஆகிய இதழ்களின்வழி சமயப் பணியோடு சமுதாய மேம்பாட்டுப் பணிகளையும், அறிவியல் தமிழ் வளர்ச்சிப் பணிகளையும் தொடர்ந்து ஆற்றி வருகிறார். சமய வாழ்வு, காற்றில் வந்த கருத்து மழை ஆகிய நூல்களை எழுதியும் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளார். அடிகளார் அவர்கள் ஆற்றிவரும் பணிகளுக்காக 'இயல் செல்வம்', 'முத்தமிழ்ப் பேரறிஞர்' எனும் சிறப்புப் பட்டங்களும் தமிழ்நாடு அரசின் 'கலைமாமணி' விருது, இந்திய அரசின் 'கிரிஷக் சிரோன்மணி' விருது ஆகியவையும் அளிக்கப் பெற்றவர்.

உலகத் திருக்குறள் பேரவை இயக்கத் தலைவராக இருந்து பொழிவுகளாலும் எழுத்துரைகளாலும் மக்களிடையே திருக்குறள் நெறி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் நற்பணிகளைப் போற்றிப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு அரசு இப்பெருந்தகைக்கு 2008-ஆம் ஆண்டின் 'அய்யன் திருவள்ளுவர் விருது' அளித்து, ஒரு இலட்சம் உரூபாய்ப் பொற்கிழி வழங்கித் தங்கப் பதக்கம் அணிவித்துச் சிறப்பிக்கிறது.



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

MADURAI KAMARAJ UNIVERSITY
*(University with Potential for Excellence)*

MADURAI KAMARAJ UNIVERSITY TAMIL ACADEMY

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ச் செம்மல்கள் பேரவை

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் 46 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியும் குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதன் திருக்கோயில் உள்ளிட்ட ஆறு திருக்கோயில்களின் பரம்பரை அறங்காவலராக வீற்றிருந்து இறைப்பணி ஆற்றியும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் கல்வி அறக்கட்டளையின் சீர் இயங்கிவரும் 19 கல்வி நிறுவனங்களைச் செவ்வனே நிர்வகித்தும் தம் குருநாதர் நிறுவிய குன்றக்குடி கிராமத் திட்டக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்கு நாளும் திறம்பட உழைத்தும் 'சமய வாழ்வு', 'ஆற்றில் வந்த கருத்துமழை' என்னும் அரிய நூல்களை வெளியிட்டும், உலகத் திருக்குறள் பேரவை, திருவருள் பேரவை முதலான இலக்கிய, சமய அமைப்புக்களில் முக்கியப் பொறுப்புக்களில் வீற்றிருந்து சீரிய சமய, பண்பாட்டு வளர்ச்சி, சாதி சமய நல்லிணக்கப் பணிகளை ஆற்றியும் தமிழ்நாட்டில் புயல், மழை, வெள்ளம், தீ விபத்துக்கள் நேர்ந்த பல பகுதிகளுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துயர் துடைப்புப் பணிகள் பல ஆற்றியும் சிங்கப்பூர், மலேசியா, இலண்டன் முதலான அயல்நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றியும் தமிழக அரசின் கலைமாமணி விருது, திருவள்ளுவர் விருது, இந்திய அரசின் கிரிஷக் சிரோன்மணி சம்மான் விருது முதலான பல விருதுகளைப் பெற்றும் தெய்வத் தமிழுக்குப் பல்லாற்றானும் பீடும் பெருமையும் சேர்த்துவரும் பான்மையைப் போற்றிப் பாராட்டும் வகையில்

**தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்** அவர்களுக்கு

**2008 ஆம் ஆண்டு**

**"மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவைச் செம்மல்"**

என்ற விருது வழங்கி இப்பேரவையின் உறுப்பினராக ஏற்றுக்கொண்ட பெற்றியை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இதன்வழி அறிவிக்கின்றது.

பல்கலைநகர், மதுரை
தி.வ.ஆ.2040, மாசி 1
பிப்ரவரி 13, 2009

துணைவேந்தர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

குன்றக்குடி ஆதீனம்

# மக்கள் சேவையில் செம்மை


**கல்வி மற்றும் சமூக சேவைகளில் குன்றக்குடி முக்கிய இடம் வகிக்கிறது. நாடு முழுவதிலும் இதற்கான நன்மதிப்பு அதிகம்.**

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகே 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குன்றக்குடியில் அமைந்திருக்கிறது ஊரின் பெயரையே தாங்கியுள்ள குன்றக்குடி ஆதீனம். முதலில் இந்த மடம் திருவண்ணாமலையில் இருந்தது. பின்னர் அங்கிருந்து பிரான்மலைக்கு சென்றது. அதன் பின்னர் குன்றக்குடி வந்து நிலைத்து விட்டது. அதனால் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதிணம் என்று பெயர் பெற்றுவிட்டது.

தற்போதுள்ள 18 ஆதீனங்களிலும் சர்ச்சைகள் எதிலும் சிக்காமலும் அனைத்து தரப்பு மக்களிடமும் பெரு மதிப்பு பெற்றதாகவும் இருப்பது குன்றக்குடி ஆதினம்தான். இது வரை 45 ஆதீனங்கள் இருந்திருக்கின்றனர். தற்போது இருப்பவர் 46வது ஆதீனம். தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள். 45வது அடிகளான தெய்வசிகாமணி அருணாசல தேசிக பராமாசார்ய சுவாமிகளின் காலம் குன்றக்குடி ஆதீனத்தின் பொற்காலம் எனலாம். 1969ல் தி.மு.க ஆட்சியில் இவர் சட்டமன்ற மேலவை உறுப்பினராக (எம்.எல்.சி) நியமிக்கப் பட்டார். குன்றக்குடி ஒரு சிற்றூராட்சி கிராமம். மலிவு விலை மதுக் கடைகள் திறக்கப்பட்டபோது இங்கு அதற்கு தடை விதித்து, உயர் நீதிமன்றம் போய் வெற்றி பெற்றார். பஞ்சாயத்து தலைவராக இருந்த ஒரே மடாதிபதி குன்றக்குடி அடிகளார்தான்.

அடிகளாரின் முழு கவனமும் குன்றக்குடி கிராமத்தை அபிவிருத்தி செய்வதில் சென்றது. 1977ல் குன்றக்குடி திட்டக் குழு உருவாக்கப்பட்டது. கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. குன்றக்குடி ஒரு முன்மாதிரி கிராமமாக மாறியது. இதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்த அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, தான் விரும்பும் முன்மாதிரி கிராமம் இதுதான் என்று 1984ல் கூறினார்.

1995 ஏப்ரல் 15ல் அடிகளார் காலமானார். அதன் பின்னர் தற்போதைய ஆதீனம் பதவிக்கு வந்தார். குன்றக்குடி ஆதீனம் சார்பாக 13 பள்ளிகள், 2 தொழிற் பயிற்சி மையங்கள், 2 கல்லூரிகள் உள்ளன.



சமூக சேவைக்காக மதிக்கப்படும் குன்றக்குடி ஆதீனத்தில் தலைமுறை மாற்றம் சுமுகமாக இருந்தது.


புயல், வெள்ளம், தீ விபத்துகள் போன்ற இயற்கை பேரிடர்கள் நேரும் சமயங்களில் நாடெங்கும் சென்று குன்றக்குடி கிராம திட்டக் குழுவின் உறுப்பினர்கள் பணியாற்றுகிறார்கள். மதக் கலவரங்கள் நடக்கும் இடங்களுக்கும் சென்று அவர்கள் சமுதாயப் பணியாற்றுகிறார்கள்.

சமுதாயப் பணியில் மற்ற எல்லா ஆதீனங்களையும் விட குன்றக்குடியே முன்னணியில் உள்ளது. 2004 சுனாமியின் போது குன்றக்குடி அடிகளாரும் அவரது சீடர்களும் ஓடோடிச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்தது பலராலும் போற்றப்பட்டது. மோசமாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினத்தில் பிணங்களை எரிக்கும் செயலில்கூட குன்றக்குடி ஆதீனமே முன்னணியில் நின்று பணி புரிந்தது மறக்க முடியாதது.

நன்றி: இந்தியா டுடே





**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 12.03.2001 அன்று திறந்து வைக்கப் பெற்ற தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம். ஆண்டுதோறும் அன்னாரது பிறந்த சூலைத் திங்கள் 11ஆம் நாளை அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.**

COVER STORY

# Breaking barriers

**The story of how religious institutions and leaders broke rules to provide relief to the tsunami victims in Tamil Nadu.**

S. VISWANATHAN

RELIGIOUS bigotry often hampers unity and causes tension among communities, but there have been occasions when certain sections of religious institutions rise above prejudices and unite for the service of humanity. This happened tellingly in Nagapattinam district in the aftermath of the tsunami, when churches, mosques and temples broke with tradition to help the hapless people.

Velankanni, located 10 km away from Nagapattinam, houses the magnificent 17th century shrine, the basilica of Our Lady of Health. Known as the "Lourdes of the East," Velankanni attracts not only Catholic pilgrims but also people of other religions from all over the world. On December 26, the numerous lodging houses in the town were overflowing with pilgrims, who had gathered for the special Christmas mass. The killer waves hit when the mass was being held in Malayalam. (The shrine holds mass in Tamil, Telugu, Malayalam and English on specified days.) Hundreds of pilgrims, including many children, were taking a dip in the "holy" sea and scores of children of the local communities were playing close to the sea. Shops lining the shore were crowded with pilgrims looking for mementos. Most of these people had no chance against the giant waves.

In the first count, there were more than 800 bodies. Half of them could be pilgrims, said Very Rev. Fr. P. Xavier, rector of the parish. Bodies lay scattered in front of the church and in other areas as well. For the police, government officials and volunteers from non-governmental organisations, including some associated with the church, the immediate challenge was to remove the bodies and admit the injured to hospital. Messages for manpower went out to several places and among those who responded were the *dargah* at Nagore, 20 km away, which draws many Hindu pilgrims too, and the Hindu mutt at Kundrakudi, in Sivaganga district, more than 150 km away. A 100-member team of volunteers from Kundrakudi led by Ponnambala Adigal, the head of the mutt, and a 15-member team of Muslim youth from Nagore, also a tsunami-affected village, worked with local people and volunteers from many districts to bury the dead.

They also helped clear the debris to open up the roads for vehicles. Ponnambala Adigal, who stood tradition on its head by visiting the affected people, said he was only following in the footsteps of his predecessor, Kundrakudi (Deivasigamani Arunachala Desiga Paramacharya) Adigal, in rushing to help the suffering masses. He called the services of Kundrakudi Adigal during the Mandaikkadu communal riots in Kanyakumari district in the late 1970s, when Hindus boycotted Christian fishermen. The senior Adigal helped fishermen resume sale of fish, by himself taking out a fish and launching the sale. "The killer waves did not discriminate between man and man. May humans also close ranks to face the challenge," said Ponnambala Adigal, who also distributed food materials and clothes.

Rector Xavier said the church had provided for the stay of the victims belonging to all religions. Its canteen provided food to the affected people and relief materials were pouring in from different parts of the country and from abroad, he said.




Ponnambala Adigal on a relief mission.

The Parankippettai Islamic Ikkya Jamaat rushed to the help of people around the little town near Chidambaram, another popular pilgrim centre. Within minutes of the information reaching them the Jamaat Committee launched massive relief operations in places such as Chinnur, Indira Nagar, Puduppettai, Pudukuppam and Velingarayanpettai.







**(Clockwise from above) the Velankanni church, the Nagore dargah and the Siva temple in Thirumalai Rayan Pattinam.**

Youth of the community, numbering about 5,000, rescued many people and arranged for the hospitalisation of the injured. An ambulance gifted to the Jamaat by a Singapore-based devotee came in handy for the purpose. The volunteers saved about 400 people.

"Our boys joined the efforts of the district administration in rescuing people and recovering bodies," said O.A.W. Bawajan, secretary of the Jamaat. They also took up relief operations. "We now take care of about 15,000 displaced people of different religions," he said. They are being sheltered in four camps and are fed by the Jamaat using its own funds and donations from people attached to the Jamaat.

"We have provided for the stay of our non-Muslim brethren in our mosque," said Bawajan. "For us, human lives are more important than the sanctity of places of worship," he added.

In Nagore also, where hundreds of people died and a large number of families were displaced, the Saint Hazrath Sayeed Shahul Hameed Qadir Oli Dargah, which attracts pilgrims from all communities, did remarkable service, say the local people. The dargah provided shelter to about 4,000 people and its volunteers played a key role in retrieving bodies, arranging for burial or cremation, and providing assistance to the survivors. Relief materials were received from hundreds of regular visitors to the *dargah* from all over the country and distributed to the victims. About 250 bodies of fishermen and others, including 18 Hindus killed by the tsunami, were buried in the *dargah* compound, relaxing the religious rules, said a spokesperson of the *dargah*.

Temples in several places have also been serving as camps for the victims. At Thirumalai Rayan Pattinam in Karaikkal, the affected fishermen from Pattinacherry were accommodated in a Siva temple. A camp office of the Pondicherry government is functioning from there. One of the trustees was seen distributing kerosene stoves to the families sheltered in the temple. ■

